**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 71/2019** **Date:23.06.2026.**

**(PW2)-** பாஸ்கரன்

**7 மற்றும் 8 ஆம் பிரதிவாதிகள்** தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கில் தரப்பினரா என்றால் தரப்பினர் இல்லை சாட்சி சொல்ல வந்தேன். நான் நீதிமன்ற அழைப்பனை பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இல்லை. வாதி எனது உறவினர் என்பதால் வாதிக்காக வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது சொத்தில் முள்வேலியை இடித்தற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் இந்த வழக்கின் பிராதை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

2. வாதி முள்வேலி அமைத்திருந்த கிழக்கே உள்ள 3 அடி அகல பாதை புறம்போக்கு நிலம் என்றாலும் அது குன்னங்குடி முருகன் கோவிலுக்கு சென்று அடையும் பாதை என்றாலும் சரியல்ல. மேற்படி இடம் புறம்போக்கு நிலம் என்றாலும் அதை வாதி ஆக்கிரமித்து முள்வேலி அமைத்துள்ளார் என்றாலும் சரியல்ல. வழக்கின் 8 பிரதிவாதி 08.02.2016 தேதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து ஒரு தீர்மானம் இயற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் 1 ஆம் பிரதிவாதி மேற்படி பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தர கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் 06.02.2017 தேதியில் ஒரு மனு கொடுத்துள்ளார் என்றாலும் அதன் அடிப்படையில் தான் மேற்படி புறம்போக்கு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

3. மேற்படி உத்தரவின் அடிப்படையில் வருவாய் துறை அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை 15 நாட்களுகுள் அகற்ற கோரி அறிவிப்பு கொடுத்தனர் என்றால் அது பற்றி தெரியாது. அறிவிப்பு அனுபியும் வாதி ஆக்கிரமிப்புகளை அகற்றாததால் 8 ஆம் பிரதிவாதி சட்டத்திற்கு உட்பட்டு காவல் துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றினர் என்றால் எந்த அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை. வாதிக்கு உரிமைப்பட்ட இடத்தை அகற்ற வில்லை என்றாலும் புறம்போக்கு நிலமான சர்வே எண் 268/1, 268/2,268/3 சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் தான் அகற்றப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆக்கிரமிப்புகளை எந்த தேதியில் அகற்றப்பட்டது என்றால்

22.07.2024.

4. நான் பஞ்சாயத்து தலைவரா என்றால் இல்லை. நான் வாதிக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிலத்தில் உள்ள தென்னை மரங்களை அகற்றி சேதம் ஏற்படுத்து உள்ளார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நான் கூறுவது போல் வாதிக்கு எந்த நஷ்டமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி தாவா இடம் பொது பாதை என்பதாலும் அதில் உள்ள ஆக்கிரமிப்புகள் மக்களின் பயன்பாட்டிற்கு இடையூறாக இருந்த காரணத்தினாலும் 1 ஆம் பிரதிவாதியின் மனுவின் அடிப்படையில் போடப்பட்ட உத்தரவின் பேரில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்றால் சரியல்ல. 7 , 8 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**